# எட்டுத்தொகை அகப்பாடல்களில் நெய்தல் நில மக்களின் வாழ்வியல்

*முனைவர் அ. சவரிராயம்மாள்*
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை
தி.தெ.மா.நா.ச.கல்லூரி, தெ.கள்ளிகுளம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6437

***ஆய்வுச் சுருக்கம்***

*இலக்கியங்களில் அன்பின் ஐந்திணை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். அவற்றுள் நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறைகளை அக இலக்கியங்கள் தெளி வாக எடுத்துக் கூறுகின்றன. நெய்தல் நிலத்தின் கடற்கரை ஓரங்களில் தங்களுடைய குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டு, கடலையே தெய்வம் என்று நம்பி வாழும் இந்நில மக்களின் முக்கிய தொழில்களாக மீன்பிடித் தொழில், உப்பு விளைவிக்கும் தொழில், முத்து எடுத்தல் ஆகியவற்றை மேற்கொண்டனர். நெய்தல் நில மக்களின் நம்பிக்கை, விருந்தோம்பல், தொழில்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் பற்றி ஆராயும் விதத்தில் இவ்வாய்வு அமைகிறது.*

## ஆய்வு முன்னுரை

பழந்தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர். தாங்கள் வாழ்ந்த பகுதிகளைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்று ஐந்தாக பிரித்திருந்தனர். அவற்றுள் கடலும் கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலமாகும். மனித வாழ்வியல் என்பது ஒரு தனி மனிதன் அல்லது குடும்பத்தின் வாழ்க்கையை முழுமையாக உள்ளடக்கியதாகும். தங்கள் வாழ்க்கைக்கு இயற்கையே அடித்தளம் என்று வாழ்ந்த நெய்தல் நில மக்களின் வாழ்வியல் முறைகளை சங்க இலக்கியங்கள் மிக தெளிவாக எடுத்துரைக்கின்றன. இவ்வகையில் நெய்தல் நில மக்கள் கடல் சார்ந்த தொழில்களை மேற்கொண்டு பண்பாட்டிலும், நம்பிக்கைகளிலும், ஒழுக்கத்திலும், விருந்தோம்பலிலும் சிறந்தவர்களாக வாழ்க்கையை மேற்கொண்ட விதத்தையும் இக்கட்டுரையின் வழி அறியலாம்.

## நிலத்தின் வகைப்பாடு

இலக்கியங்களில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நானிலமாகக் கருதப்பெற்றது. ஒவ்வொரு நிலத்திற்கென்றும் தெய்வங்களைவைத்துமக்கள்வழிபட்டனர். குறிஞ்சிநிலதெய்வமாக சேயோனையும்˙ முல்லை நில தெய்வமாக மாயோனையும் மருத நில தெய்வமாக வேந்தனையும் நெய்தல் நில தெய்வமாக வருணனையும் நிலத்தின் தெய்வங்களாக மக்கள் வழிபட்டனர் என்பதை,

***"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"***
***(தொல்,அகத்.5)***

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் வழி நானில நிலத்தின் தெய்வ வகைப்பாட்டினை அறிந்து கொள்ள முடிகிறது.

### நெய்தல் நிலச் சிறப்பியல்பு

அன்பின் ஐந்திணை என்பனவற்றுள் ஒன்றானது நெய்தல் நிலமாகும். நெய்தல் கடலும் கடல் சார்ந்த இடத்தை சார்ந்து காணப்படுகிறது. கடல் தொழிலையே நம்பி வாழ்கின்ற மக்கள் பரதவர்கள் எனப்பட்டனர். இந்நிலத்திற்கு மற்றொரு பெயராக குப்பம் என்றும் பாக்கம் என்றும் அழைக்கின்றனர். இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என்பது இந்நிலத்தின் உரிப்பொருளாகும். நெய்தல் நில மக்களுக்கெல்லாம் தலைவனாகப் பொறுப்பேற்றவன் சேர்ப்பன், புலம்பன் என்ற பெயர் பெற்றவனாக இருக்கிறான். இந்நில மக்கள் மழைப் பொழிந்தால் எல்லா உயிர்களும் உயிர் வாழ முடியும். பயிர்கள் செழிப்பாக வளரவும் மழைக்குரிய தெய்வமான வருணனை வணங்கிப் போற்றினார்கள். நெய்தல் நிலத்தில் கடலின் ஓரத்தில் இருந்து 50-60 அடி தூரத்திற்கு பெரும்பாலும் உப்பங்கழியாகவே காணப்படும். கடல் பெருக்கெடுத்து நிலத்தின் ஓரங்களில் சிறு நீர்நிலைகள் போன்று தண்ணீர் தேங்கி நிற்கும். இந்த நீர்நிலைகளின் அருகாமையில் நெய்தல் நில மக்களின் குடியிருப்புகள் இருக்கும். அப்படிப்பட்ட இடத்தில் பச்சைக் கொடி போன்ற தாவரங்கள் காணப்படும். இதற்கு பெயர் நெய்தற் கொடி என்றும், இக்கொடிதனில் பூக்கின்ற பூவிற்கு நெய்தற் பூ என்றும் எட்டுத்தொகை இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகைப் பாடல் உணர்த்துகிறது. அப்படிப்பட்ட நெய்தல் நிலத்தில் பூக்கின்ற நெய்தற் பூக்களை நாரைகள் சிதைத்து அங்கு வரும் மீனை உண்ணுகின்ற தன்மையையும் நெய்தல் நிலத்தில் காணமுடிகிறது.

***"அடும்பவிழ் அணிமலர் சிதைஇ மீன் அருந்தும்
தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்"***
***(குறுந்,பா.349)***

என்ற பாடலின் வழியாக கடலின் ஓரமாக அமைந்த நெய்தல் நிலத்தின் சிறப்பியல்புகளை இலக்கியப் பாடல்களின் மூலம் காணமுடிகிறது.

மேலும், இந்நிலத்தில் கடற்காக்கைகள் கூட்டம் கூட்டமாக பறந்து செல்வது மிக அழகாக காட்சி அளிப்பதாகவும் புலவர்கள் பாடியுள்ளனர் என்பதை,

***"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்து நீர் இருங்கழி இரைதேர்ந் துண்டு"***
***(ஐங்குறு,பா.162)***

என்றும்,

***"சிறுவெண் காக்கைச் செவ்வாய் பெருந்தோடு
எறிதிரைத் திவலை ஈர்ம்புறம் நனைப்ப
பனிபுலந்து உறையும் பல்பூங் கானல்"***
***(குறுந்,பா.334)***

என்ற பாடலின் மூலம் சிறுவெண் காக்கையானது பெரிய உப்பங்கழியில் இரைதேடி உணவிட்டு அந்நிலத்தின் பூஞ்சோலையில் போய் நிம்மதியாக தங்கும் என்று ஐங்குறுநூறு பாடல் உணர்த்துகிறது.

இந்நில மக்கள் மரக்கலன்களில் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் தொழிலைச் செய்யும் போது சுறா மீன்களால் பல்வேறு துன்பத்தை அடைகின்றனர் என்பதை,

***"எறிசுறாக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்"***
***(குறுந்,பா.318)***

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. அவ்வாறு கடலில் சென்று மீன் பிடிக்கின்ற போது சில நேரங்களில் சுறா மீன்கள் தாக்கி தன் உடம்பில் புண் பட்டுவிட்டால் அந்த புண் ஆறுகின்ற வரைக்கும் கடலுக்குள் சென்று மீன் பிடிக்கமாட்டார்கள் என்பதை,

**"வயச்சுறா எறிந்த புண்தணித்து எந்தையும்**
**நீல்நிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்**
**உப்பை மாறி வெண்ணெல் தரீஇய**
**உப்பு விளை கழனிச் சென்றனள்"**

**(குறுந்,பா.269)**

என்ற பாடல் வரிகள் மீனவர்கள் மீன்பிடிக்கும் நேரத்தில் நேரும் துன்பத்தை எடுத்துரைக்கிறது.

## நெய்தல் நில மக்களின் தொழில்

நெய்தல் நில மக்கள் கடல் தொழிலையே தொழிலாக கொண்டிருந்தனர். கடலை நம்பியே இவர்களது வாழ்க்கை பயணங்கள் இன்று வரை காணப்படுவதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. நாகரீகம் மற்றும் தமிழ் மக்களின் கலாச்சாரம் வளர்ச்சி அடைவதற்கு மிக உறுதுணையாக இருந்ததற்கு காரணம் நெய்தல் நிலமே ஆகும். நெய்தல் நிலத்தைச் சார்ந்த மக்கள் முக்கிய தொழிலாக மீன்பிடித் தொழில் மற்றும் உப்பளங்கள் அமைத்து உப்பை எடுத்து வாணிபம் செய்தனவற்றையும், உப்பு விற்கும் பெண்ணானவள் உமணத்தி என்று அழைக்கப்பட்டதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. உப்பு வணிகம் செய்தவர்கள் உமணர் என்று அழைக்கப்பட்டனர். இதனை,

**"கதழ் கோல் உமணர் காதலர் மடமகள்**
**சில் கோல் எல் வளை தெளி ர்ப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**
**சேரி விலைமாறு கூறலின்"**

**(அகம்,பா.140)**

என்ற பாடலின் வழி அறியமுடிகிறது. மேலும், உமணர் கடல் நீர் நிலைகளில் இருந்து விளைவித்த உப்பை ஒன்றாக குவியலாக குவித்து அவற்றை சகடங்களில் ஏற்றிச் சென்று முல்லை, குறிஞ்சி, மருதம் ஆகிய நில மக்களுக்கு விற்பனை செய்வர். மாட்டுவண்டிகளை பயன்படுத்தி உள்ளனர் என்பதை,

**"உப்பொய் உமணர் அருந்துறை போக்கும்**
**ஒழுகை நோன் பகடு ஒப்பக் குழீஇ"**

**(அகம்,பா.30)**

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

**"தந்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி"**

**(நற்,பா.183)**

என்ற நற்றிணைப் பாடல் வரிகளும் உமணர்கள் உப்பு விற்ற பாங்கினை விளக்குகின்றது. தந்தையும் மகளுமாக சென்று மருத நிலத்தின் தெரு வீதிகளில் உப்பு விற்ற செய்திகள் இலக்கியத்தின் வழி அறியலாகிறது.

மேலும், கடலில் மீன் பிடிக்க கட்டுமரங்கள் மற்றும் மரக்கலங்களை பயன்படுத்தி மீனவ குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் மீன் பிடிக்க செல்வர். அவ்வாறு சென்று பிடிபட்ட மீன்களை கரைக்கு கொண்டு வந்து அதன் பின்னர் மீனவ பெண்கள் அந்த மீன்களை அயல் ஊர்களில் விற்று, அதற்கு பதிலாக தானியங்களைப் பெற்று வாழ்ந்தார்கள். விற்று மிகுந்த மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்தி உலர்த்திக் கருவாடு செய்து விற்றனர். இவ்வாறு தன் குடும்பத்தையும் கவனித்துக் கொண்டு மீனையும் விற்று, குடும்பத்தை நடத்தும் மனப்பாங்கு உடையவர்களாக நெய்தல் நில பெண்கள் திகழ்ந்தனர் என்பதை,

**"அணிற் பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து**
**மணிக் கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப**
**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ ஆகியர் எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே"**

**(குறுந்,பா.49)**

என்ற குறுந்தொகை பாடல் நெய்தல் நில பெண்களின் தொழிலைப் பற்றி சிறப்பாக எடுத்துரைக்கிறது.

## நெய்தல் நில மக்களின் நம்பிக்கைகள்

மனிதன்தன்னுடையவாழ்வில்பார்த்தது, கேட்டது, அனுபவம் போன்றவற்றால் உணர்ந்து கொண்டவைகளை அடிப்படையாக

கொண்டு சில நிகழ்வுகளை தோற்றுவிக்கிறான். அவை மக்களிடையே நம்பிக்கையாக மாறுகின்றன. அவற்றின் அடிப்படையில் நெய்தல் நில மக்கள் பல நம்பிக்கை உடையவர்களாக விளங்கினர். இந்நில மக்கள் வருணனை நிலத்தின் தெய்வமாக வழிப்பட்டனர். கடலில் கிடைக்கின்ற பொருட்களை வைத்து வழிபாட்டு முறைகள் நிகழ்த்தினர். கடலில் கிடைக்கக் கூடிய அரிய பொருட்களில் சங்கு ஒன்று. சங்கு வைத்திருந்தால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கை இந்நில மக்களிடையே இருந்துள்ளது. நெய்தல் நில மக்கள் வலம்புரிச் சங்கை தன் விருப்பத் தெய்வத்திற்கு வழிபடு பொருட்களாகவும் வைத்திருந்தனர். இன்றைக்கும் பல கோவில்களில் சங்கு வழிபாடு நடைபெறுவதை காணமுடிகிறது. கடல் தெய்வத்தை வழிபட சுறாமீன் கொம்பினையும், சங்கு, முத்து போன்றவற்றையும் பயன்படுத்தியுள்ளனர். நெய்தல் நில மக்களிடத்தில் இருந்த இவ்வழிபாட்டு நம்பிக்கைகள் பிற இடங்களுக்கும் பரவியுள்ளது குறிப்பிடத்தக்கது. என்பதை,

> **“புகழ் மலி சிறப்பின் கொற்கை முன்துறை**
> **அவிர் கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து”**
> **(அகம்,பா.201)**

என்ற அகநானூற்று பாடலின் மூலம் நெய்தல் நில மக்களிடையே தெய்வ நம்பிக்கை இருந்துள்ளதையும் அறிய முடிகிறது.

## ஆய்வு முடிவுரை

நெய்தல் நில மக்களின் வாழ்வியல் முறைகளை இலக்கியங்கள் தெளிவாக குறிப்பிடுகின்றன. நெய்தல் நிலத்தில் மக்களின் தொழில் முறைகள், அவர்களுடைய வாழ்வாதாரங்கள் போன்றவற்றை இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. கடலையே தெய்வமாக நம்பி வாழும் வாழ்க்கை உடையவர்களாகவும், கடலில் கிடைக்கக்கூடிய மீன்கள், முத்துக்கள், சங்குகள், வெண்கல் உப்பு ஆகியவற்றை விற்பனை செய்தும் தங்கள் வாழ்க்கையைத் திறம்பட நடத்திய தன்மையையும் இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

## பார்வை நூல்கள்

1. இளம்பூரணர், தொல்காப்பியம்(அகத் திணையியல்), திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,2004
2. வி.நாகராஜன், குறுந்தொகை(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை-600098, முதல் பதிப்பு-2004
3. இரா.செயபால், அகநானூறு(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை-600098, முதல் பதிப்பு-2004
4. கு.வெ.பாலசுப்பிரமணியன், நற்றிணை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை-600098, முதல் பதிப்பு-2004
5. எஸ்.ராஜம், ஐங்குறுநூறு, மர்ரே அண்டு கம்பெனி, சென்னை-600001, முதல் பதிப்பு 1957